பிற்பகல் 1-35

நிறைவாக இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் 5 ஆண்டுக் காலத்தில் நடந்தேறிய 11 கூட்டத் தொடர்களின் அனைத்து நாட்களிலும் தவறாது வருகைத் தந்து, தமிழக மக்களுக்கு எண்ணிலடங்கா ஏற்றமிகு திட்டங்களை அள்ளி வழங்கியதுடன், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு அறிவார்ந்த பதிலளித்து, இப்பேரவை சிறப்பாக நடைபெற வழிகாட்டிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இத்தருணத்தில் என் சார்பாகவும், பேரவையின் அனைத்து உறுப்பினர்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நடுநிலை தவறாது, அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமாக வாய்ப்பளித்து, பேரவையைப் பாங்குடன் பரிமளிக்க வைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாமன்றம் சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பு நல்கிய மரியாதைக்குரிய எதிர்க்கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலர் ஆகியோருக்கும் மற்றும் அவருடன் சார்ந்த செயலகத்தின் இதர அரசு அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம் மீதான நிதி அளிப்புக்கான தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015-2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

MESSAGE

"In pursuance of Clause 2 of Article 205, read with Clause 3 of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 2015-2016."

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கை. 2015-2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20-2-2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.